செ.வெ.எண்-03 நாள்-04.05.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் விவசாயம், வீட்டு உபயோகம் மற்றும் மண்பாண்டம் செய்வதற்கு பொதுப்பணித்துறை கட்டுபாட்டில் உள்ள ஏரி மற்றும் குளங்களில் வண்டல் மண் எடுத்துச்செல்ல மாவட்ட நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது.

வண்டல் மண் எடுத்துச்செல்ல அனுமதி பெற விரும்புவோர் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் பட்டா நகலை சமர்ப்பித்து, விண்ணப்பப் படிவத்தை காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணிக்குள் பெற்றுக்கொள்ளலாம். மேலும், மனுக்கள் விண்ணப்பித்த மூன்று நாட்களில் அனுமதியை பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.